1995 ஏப்ரல் 21]

என்றாலும், அதனுடைய கோவிலினுடைய பிரகாரத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றாலும், அதற்கு ஆதீனம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதீனம் எங்களுக்கு இப்படி தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்று பரிந்துரை செய்தால். உடனடியாக நாங்கள் அனுமதி கொடுப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 399, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 400, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

400—

நூற்பு மையத்திற்குக் கருவிகளைப் பயன்படுத்த நடவடிக்கை

*22581—**திரு ஆ. சுப்புரத்தினம்:***

மாண்புமிகு கதர்த் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், இடையன்வலசு கிராம நூற்பு மையத்திற்கு சொந்தமான பல விலை உயர்ந்த கருவிகளை தக்க முறையில் பயன்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழனி வட்டம் இடையன்வலசு கிராமிய நூற்பு மையத்திற்குச் சொந்தமான கருவிகளைப் பயன்படுத்த எவ்விதமான சாத்தியக் கூறுகளும் இல்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம் இடையன்வலசு கிராமம் என்பது மிகவும் ஏழை விவசாயிகள் வாழக்கூடிய ஒரு பகுதி. வேலையற்ற கிராம இளைஞர்கள் அதிகம் இருக்கிறார்கள். எனவே, இந்த நூற்பு மையத்தில் இருக்கக்கூடிய விலை உயர்ந்த கருவிகளைப் பயன்படுத்தி, இந்த நூற்பு மையத்தை மீண்டும் நன்கு செயற்படுததச் செய்தால், வேலைவாய்ப்பு அதிகம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

[*1995 ஏப்ரல் 21*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பு மையத்தில் இருக்கக்கூடிய இயந்திரங்களைப் பயன்படுத்தாமல இருப்பதற்கு ஒன்றிரண்டு காரணங்கள் இருந்தால் பரவாயில்லை. கிட்டத்தட்ட 7,8 காரணங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் கிட்டத்தட்ட 1968-லே தொடங்கிய இந்த நூற்பு மையத்தில் இருக்கக்கூடிய இயந்திரங்கள் 1894 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இயந்திரங்களாக இருக்கின்றன. நூறு ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட இயந்திரங்களை தற்போது அங்கே பயன்படுத்துவதற்கு சாத்தியகூறுகள் இல்லை. மேலும் இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு மின் சக்தியைப் பயன்படுத்த வேண்டும். அப்படி மின் சக்தியைப் பயன்படுத்தும்போது மத்திய கதர் ஆணைக்குழு கொடுக்கக்கூடிய மானியம் கிடைக்கப்பெற வாய்ப்பு இல்லை. ஆகவே சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.டி. செல்லசாமி.

திரு. ஏ.டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம், இடையன்வலசு என்பது ஒட்டஞ்சத்திரம் தொகுதிக்கு உட்பட்ட கிராமம் ஆகும். இடையன்வலசு என்பது ஒரு வறட்சியான பகுதி. அங்கே இந்த நூற்பு ஆலையை வைத்துத்தான் அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்கள் அனைவரும் பிழைப்பு நடத்திக் கொண்டுள்ளார்கள். கிட்டத்தட்ட 10,15 கிராமங்கள் அந்தப் பகுதியில் வறட்சியாக உள்ளதால் அங்கிருக்கின்ற பெண்கள் இந்த நூற்பு ஆலையை வைத்து நல்லதொரு பிழைப்புக்கு ஏற்ற தொழிலாக நடத்திக் கொண்டுள்ளார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து அந்தக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பு மையத்தில் இருக்கக் கூடிய இயந்திரங்களுடைய மொத்த மதிப்பு 56,000 ரூபாய்தான். ஆனால் இந்த இயந்திரத்தை அங்கு பொருத்தியபிறகு இதுவரை அதற்கு பழுது நீக்கம் செய்வதற்காக செய்யப்பட்ட செலவுத் தொகை 99,000 ரூபாயாக இருக்கிறது. மேலும் நூறு வருடங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட அந்த இயந்திரங்களை தற்போது பயன்படுத்துவதற்கு தகுந்த தொழில் நுட்ப உதவியாளர்கள் இல்லை. ஆகவே, சாத்தியக்கூறு இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.